# DEPOSITION OF WITNESS

## In the Court of Judicial Magistrate No.II, Mettur

**Case No : C.C. 303/2024**

**Prosecution witness : அ.சா. 4** **Date : 19.09.2025.**

| Name : குமுதவள்ளி | Caste : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Religion : |
| Taluk : | Age : |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் சின்னப்பம்பட்டியில் குடியிருந்து வீட்டிலிருந்து வருகிறேன். சம்பவ சமயத்தில் நான் ஜலகண்டாபுரத்தில் உள்ள சிவசக்தி பைனான்சில் காசாளராக வேலை செய்து வந்தேன். மேற்சொன்ன பைனான்சை நான் தான் முழு நேரமாக பார்த்து வந்தேன். காலை 09 மணிக்கு சென்று மாலை 6 மணிக்கு திரும்புவேன். கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்பாக மதியம் 12 மணி சுமாருக்கு நான் கீழே கழிப்பிடம் செல்வதற்காக ஒரு மாடி கீழே இறங்கி சென்றேன்.

2) நான் கழிப்பிடம் செல்லும் போது கண்ணாடி கதவை சாத்திவிட்டு பூட்டாமல் பணம் வைக்கும் பெட்டியை பூட்டாமலும் சென்றேன். அந்த பெட்டியில் ரூ.10,000/- இருந்தது. நான் கழிப்பிடம் சென்று விட்டு 5 நிமிடத்தில் திரும்ப வந்து பார்த்த போது பணம் காணவில்லை. அப்போது ஐய்யப்பன் என்பவர் என் அலுவலகத்திற்குள் சென்று வந்தது தெரிய வந்தது.

3) இது குறித்து எங்களுடைய முதலாளிகள் சம்பத் மற்றும் அழகேசன் இருவருக்கும் தகவல் கொடுத்தேன். அவர்கள் வந்த பிறகு காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன்.தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரை நான் காவல் நிலையத்தில் கொடுத்தேன். புகார் **அ.சா.ஆ.2** ஆகும். சம்பவ சமயத்தில்

ஐய்யப்பன் என்பவரை பார்த்தேன். தற்போது நினைவில்லை. சாட்சி தன்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில்  உள்ள பணத்தாள்கள் ரூ.2000/- நோட்டு ஒன்று, ரூ.500/- நோட்டு 16, திருடப்பட்டது என அடையாளம் காட்டினார். போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி  தரப்பில் குறுக்கு விசாரணை-</u>

4) போலீசாரிடம் கொடுத்த புகாரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் ஆமாம். அதில் நான் கையொப்பம் மட்டும் செய்தேன் என்றால் ஆமாம். அதை யார் எழுதினார்கள் என்றால் காவலர்கள் எழுதினார்கள். ரூ.10,000/- காணாமல் போனது குறித்து எத்தனை ரூபாய் நோட்டுகள் என்று தெரியாது என்றால் ஆமாம். போலீசாரிடமும் பண விவரம் புகாரின் போதோ, விசாரணையின் போதோ குறிப்பிடவில்லை என்றால் ஆமாம்.

5) போலீசார் என்னை எங்கு வைத்து விசாரித்தனர் என்றால் புகார் கொடுக்கும் போது காவல் நிலையத்தில் வைத்து விசாரணை செய்தனர். அதன் பின்னர் விசாரிக்கவில்லை என்றால் ஆமாம்.  முதல் விசாரணையில் எதிரியின் பெயர் ஐய்யப்பன் என்று குறிப்பிட்டதை போலீசார் காவல் நிலையத்தில் என்னிடம் சொன்னார்களா என்றால் ஆமாம்.

மறுவிசாரணை இல்லை.

D.Myilswamy

Digitally signed by D.Myilswamy
Date: 2025.09.19 17:10:04 +0530